(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **13.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 ஒக்டோபர் 06 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ விமல் வீரவங்ச,** கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயனப் உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச தொழில்முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

**கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

**கௌரவ மிலான் ஜயதிலக்க**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர**

**கௌரவ குலசிங்கம் திலீபன்**

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்**

**கௌரவ எம். எஸ். தௌபீக்**

**கௌரவ ஷான் விஜயலால் த சில்வா**

**கௌரவ சாமர சம்பத் தசநாயக**

**கௌரவ பழனி திகாம்பரம்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ றோஹண திஸாநாயக்க**

**கௌரவ சாரதீ துஷ்மந்த**

**கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய**

**கௌரவ இசுரு தொடன்கொட**

**கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ எச். நந்தசேன**

**கௌரவ கயாஷான் நவனந்த**

**கௌரவ அசங்க நவரத்ன**

**கௌரவ மனுஷ நாணாயக்கார**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ சுஜித் பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ நிபுண ரணவக**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ மஹிந்த சமரசிங்ஹ**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்*:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்' எனும் சட்டமூலம் தொடர்பாக 2020 செப்தெம்பர் மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளின் அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட மனுக்களுக்கு மேலதிகமாக, உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இருபத்தைந்து மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் II ஆம் பகுதியையும், மூன்றாவது தொகுதியின் II ஆம் பகுதியையும் ஒன்பதாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் ***அச்சிடப்பட*** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் பத்தாவது தொகுதியின் XVII ஆம் பகுதியை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் ***அச்சிடப்பட*** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர் —

(i) 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான கட்டிடத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2019 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2019 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2019 ஆம் ஆண்டுக்கான சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(vi) 2019 ஆம் ஆண்டுக்கான மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் சமூக பாதுகாப்புப் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(vii) 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பாராளுமன்றத்தின் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அலுவலகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார் .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கல்வி அமைச்சர் —

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இலங்கை கட்புல மற்றும் அரங்கேற்றற்கலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக 2020 யூன் 13 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக ஓய்வுபெற்ற பேராசிரியர் வீரக்கோன் முதியன்சலாகே அபயரத்ன பண்டார அவர்களை நியமித்தல் தொடர்பில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 யூன் 29 ஆம் திகதிய 2182/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக 2020 ஏப்ரல் 01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக கலாநிதி நவரட்னகே சுனில் ஜயந்த நவரட்ன அவர்களை நியமித்தல் தொடர்பில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 யூன் 29 ஆம் திகதிய 2182/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக 2020 யூலை 01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் எஸ்.எம்.ஏ நாணயக்கார அவர்களை நியமித்தல் தொடர்பில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 யூலை 01 ஆம் திகதிய 2182/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கல்வி அமைச்சர், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு உயர்கல்விப் பிரிவு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 120(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார் .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) போக்குவரத்து அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(9) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார் .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) சுற்றுலாத்துறை அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(11) நெடுஞ்சாலைகள் அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார் .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) பிலியந்தல, தும்போவில, இல. 92/3 இல் வதியும் செல்வி கே.ஏ. ருவமி தருதணியினது 2020.09.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) நுகேகொட, பெபிலியான வீதி, இல. 32/ஏ யில் வதியும் திரு. பி.எஃப். பொன்சேக்காவினது 2020.09.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) தெஹிவளை, பிரதிபிம்பாராம வீதி, இல. 79/51 இல் வதியும் திரு. பி.ஆர்.எல். பீரிஸினது 2020.09.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) பிலியந்தலை, பிம்பாராம வீதி, இல. 41/1 இல் வதியும் திரு. ஆர்எம். டிக்கிரி பண்டாவினது 2020.09.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ காமினி லொக்குகே சமர்ப்பித்தார்.

(2) (i) மெதவச்சிய, புகையிர நகரம் எனும் முகவரியில் வதியும் திருமதி ஏ.எம். சந்திரிக்கா பிரியதர்சனீ குமாரி அபேசிங்கவினது 2020.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மெதவச்சிய, பிஹிம்பியகொல்லேவ எனும் முகவரியில் வதியும் திரு. டி. எம். எஸ். ஆர். செனெவிரத்னவினது 2020.08.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) அநுராதபுரம், விமான நிலைய வீதி, பொலிஸ் விடுதி, இல. 17 இல் வதியும் திரு. டி.ஆர்.சீ. திசாநாயக்கவினது 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ எஸ்.எம். சந்திரசேன சமர்ப்பித்தார்.

(3) (i) கிரிந்திவெல, மில்லதே, கிரிவெலேவத்த, இல. 116/எஃப் இல் வதியும் திரு. பீ.ஜீ.டப்ளியூ. ஜயசிங்கவினது 2020.09.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) நிட்டம்புவ, கிம்புள்ஹேன வத்த, இல. 68/02 இல் வதியும் திரு. ஆர்.ஏ. செனெவிரத்னவினது 2020.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) பெப்பிலியவெல, தங்கல்ல, "சிறிசெவன", இல. 374 இல் வதியும் திரு. ஆர்.பி.டப்ளியூ. ராஜபக்ஷவினது 2020.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா சமர்ப்பித்தார்.

(4) கதுருவெல, திமுதுகம, இல. 30 இல் வதியும் திரு. டப்ளியூ.எம். கிரேஷன் சுனிலினது 2020.08.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அமரகீர்த்தி அதுகோரள சமர்ப்பித்தார்.

(5) நிட்டம்புவ, 26 ஆம் கம்பம், கிறீன்பார்க் வீதி, இல. 64/15 இல் வதியும் திரு. இந்திரஜித் ரவீந்து பஸ்னாயக்கவினது 2020.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அலுவல்கள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 10 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 07 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தின அமர்வுகளில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வு** : பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2020 செப்தெம்பர் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினாலும் தடைபெறாமல், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி முதற்கொண்டு, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**6. நிதி (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 2.22 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக" என நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.30 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.19 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் மேம்பாட்டு

அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2020 ஏப்ரல் 16 ஆம் திகதிய 2171/5 ஆம் இலக்க, 2020 மே 22 ஆம் திகதிய 2176/19 ஆம் இலக்க, 2020 யூன் 30 ஆம் திகதிய 2182/10 ஆம் இலக்க மற்றும் 2020 யூலை 16 ஆம் திகதிய 2184/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (குளியாபிட்டிய போதனா வைத்தியசாலையில் பேராசிரியர் அலகொன்றினை நிறுவுதல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்படடது.

"கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்குவாராக" என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.26 மணிக்கு கௌரவ இசுரு தொடன்கொட தலைமை தாங்கினார்.)

அப்பொழுது, பி.ப. 5.30 மணியாகிவிடவே இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கமைய, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2020 ஒக்டோபர் 07 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.